தமிழ்நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1973 மார்ச் 13.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் **மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு பெ. சீனிவாசன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

வீதிவிடங்கன் கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட சிலைகள்.

***குறுகியகால வினா எண் 3—திரு. கு. பெரியசாமி :** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், நன்னிலம் வட்டத்தில் வீதிவிடங்கன் என்கிற கிராமத்தில் சாமிநாதன் என்பவரால் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு கண்டெடுக்கப்பட்ட 11 சிலைகள் சம்பந்தமாக வழக்கு ஏதேனும் முடிவுறு நிலையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அந்தச் சிலைகள் கடத்தப்படாமலிருக்கவும், விற்று அழிக்கப்படாமலிருக்கவும் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) இந்தச் சிலைகள் தற்போது காவல் துறையினர் பாதுகாப்பில் உள்ளன.

திரு. கு. பெரியசாமி : தலைவர் அவர்களே, முப்பதாண்டுகளுக்குமுன் கண்டெடுக்கப்பட்ட இந்தச் சிலைகள் வெள்ளைக்கார அரசால், கண்டெடுத்தவருக்கு நூறு ரூபாய்களுக்கு விற்பனை செய்யப்பட்டது உண்மையா? விற்பனை செய்யப்பட்ட அதே சிலைகளை இன்றைக்கு ஏதாவது ஒரு மதிப்பு போட்டு அரசு திரும்பவும் விலைக்கு வாங்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : 16—10—1924-ல் அந்த சிலைகளை 129 ரூபாய் 14 அணுவுக்கு அந்தக் கிராமத்தாருக்கு விற்பனை செய்திருக்கிறார்கள். அந்தக் கிராமத்தில் அதை எடுத்துக் கொண்டுபோய் அங்கே இருக்கின்ற கோயிலில் வைத்து அதற்கு விழாக்களெல்லாம் நடத்திக்கொண்டு வந்தார்கள். தற்போது அந்தச் சிலையைக் கண்டுபிடித்தவர்களில் ஒருவரான திரு. சாமிநாதன் என்பவரை ஒரு கருவியாக வைத்துக் கொண்டு சில பேர் சிலைகளை விற்பதற்கு முயன்று வருவதை அறிந்த காவல் துறையினர் அந்தச் சிலைகளை விற்காமலிருக்க

நடவடிக்கை எடுத்துள்ளார்கள். ஆனால், அந்த சாமிநாதன் அவர்கள் தனக்குத்தான் அந்தச் சிலை சேரவேண்டும் என்று சொல்லி, அது சம்பந்தமாக நீதி மன்றத்திற்குப் போய் தஞ்சை மாவட்ட முன்சீப் நீதி மன்றத்தில் தொடுத்துள்ள அந்த வழக்கு நிலுவையில் இருக்கிறது. இன்னும் விசாரணை முடியவில்லை.

திரு. கு. பெரியசாமி : விலை மதிப்பற்ற அரிய கலைப் பொக்கிஷங்களை வாங்கிக் கொள்ளையடிப்பதற்காகவும் வெளிநாடுகளுக்குக் கடத்துவதற்காகவும் செய்யப்படும் முயற்சிகளைத் தடுத்து நிறுத்தவும் அப்படிப்பட்டவர்கள்மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவும் அரசு என்ன முயற்சி செய்கிறது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அந்தச் சிலைகள் அத்தனையும் தற்போது மாவட்ட ஆட்சித் தலைவருடைய பொறுப்பில் இருக்கின்றன. நீதி மன்றத்தின் முடிவு தெரிந்த பிறகுதான் அந்தச் சிலைகளை அற நிலையத் துறைக்கு ஒப்படைப்பதா அல்லது வேறு என்ன செய்ய வேண்டும் என்று யோசிக்க வேண்டும். சிறிய கோவில்களில் போதுமான நிதி வசதி இல்லாததால் பக்கத்திலே இருக்கின்ற வாஞ்சிநாதசாமி கோவிலின் துணைக் கோவிலாக அதை எடுத்துக்கொண்டு வாஞ்சிநாத ஆலயம் அதற்காகும் செலவை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற ஏற்பாடுகளைச் செய்து அந்தக் கோவிலினுடைய நிர்வாக அதிகாரியை ஒரு வாதியாக இணைத்துக்கொண்டு அந்த வழக்கு இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்திற்கு வானொலி நிலையம்.

* 341 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் விவசாயப் பெருங்குடி மக்களின் நன்மை கருதி ஒரு புதிய வானொலி நிலையம் அமைத்திட மத்திய அரசினை வற்புறுத்தி ஆவன செய்யும் செயற்குறிப்பு மாநில அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.

திரு. கு. காமாட்சி : கட்சிப் பிரச்சினையில் மத்திய சர்க்கார் தாமதம் காட்டுகிறது என்பதை அனுமதிக்காத ஆலோசனைக் குழு அதைச் சொல்ல மறுத்துவிட்டது. அப்படியிருக்க, தமிழக சர்க்காரைப்பற்றி எந்த ஒரு கட்சி குறை சொன்னாலும் அதை மிகப் பெரிதுபடுத்தி விளம்பரப்படுத்துவதற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது, வானொலி நிலையத்தார் அப்படிச் செய்வார்களானால் அவர்களை நாம் கேட்க வேண்டிய கேள்வி. ஆனால், அப்படிச் செய்கிறார்களா என்பதை நாம் பார்க்க வேண்டும்.